| | |
|---|---|
| **Publication** | Dinakaran |
| **Edition** | Chennai |
| **Date** | 06/01/2011 |
| **Page** | 10 |

### சென்னையில் 3 நாள்

# ஐ.சி.டபிள்யூ.ஏ. மாநாடு

## இன்று தொடங்குகிறது

சென்னை, ஜன.6: ஐ.சி.டபிள்யூ.ஏ. கல்வி அமைப்பின் 52வது மாநாடு, சென்னையில் இன்று முதல் 3 நாட்கள் நடைபெறுகிறது.

புதிய தொழில்களில் சவால்கள் – நீடித்ததன்மை, மதிப்பு உருவாக்கம் என்ற நோக்கில் இந்த மாநாடு, கிண்டி லீ ராயல் மெரிடியன் நட்சத்திர ஓட்டலில் நடக்கிறது.

இந்திய கணக்காளர்கள் பணியில் ஏற்படும் புதிய சவால்களை சந்திப்பதற்கான புதுமைகள் மற்றும் வழிமுறைகளை ஆராயும் வகையில் ஆண்டுதோறும் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டின் மாநாட்டில் இத்துறையில் ஏற்பட்டுள்ள சர்வதேச போட்டி மற்றும் நீடித்த மதிப்பை ஏற்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுகிறது. மாநாட்டில் முன்னணி நிறுவனங்களின் தலைவர்கள், உயரதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

முன்னணி தனியார் வங்கியான ஐசிஐசிஐயின் நிர்வாக இயக்குனர் சந்தா கோச்சர், செயில் நிறுவன தலைவர் வர்மா, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவன தலைவர் சீனிவாசன், தேசிய சிறு தொழில் நிறுவன தலைவர் குமார், பைசர் மருந்து நிறுவன நிர்வாக இயக்குனர் கெவால் ஹண்டா, ஆர்சிட் கெமிக்கல்ஸ் நிறுவன தலைவர் ராகவேந்திரா, கோல் இந்தியா நிறுவன தலைவர் பார்த்தா பட்டாச்சாரியா ஆகியோர், இந்த அமைப்பில் படித்து உறுப்பினராக இருப்பதுடன் அவரவர் துறையில் உச்சத்தை தொட்டத்தை சிறப்பிக்கும் வகையில் ஐ.சி.டபிள்யூ.ஏ. சார்பில் விருது அளிக்கப்படுகிறது.